**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.164/2023**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சக்கரவர்த்தி கௌசிக் | தொழில் | : அரசு பணியாளர் கல்வித்துறை, பதிவறை எழுத்தர் |
| தகப்பனார் பெயர் | : கணேசன் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : திருநகர் | வயது | : சுமார் 23 |
| தாலுக்கா | : மதுரை | நாள் | : 02.06.2026 |
| மாவட்டம் | : மதுரை | | |

வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் ? ஆமாம். வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? தொகை ரூ.7,00,000 கடன் வாங்கியது போல் குறிப்பிட்ட வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் 2வது பத்தியில் பூர்த்தி செய்யாத பல புரோநோட்டுகள் மற்றும் என் கையொப்பம் மட்டும் செய்து பூர்த்தி செய்யாத காசோலைகளை கொடுத்திருந்தேன் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் ? சரிதான். என்னிடம் காட்டப்படும் தாவா கடனுறுதிசீட்டான வா.சா.ஆ-1 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் எனது தந்தை கணேசன் பெயரில் உள்ள TN 59 AP 3513 என்ற எண் கொண்ட மாருதி காரின் அசல் பதிவு சான்றினை வாதியிடம் கொடுத்திருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ? சரிதான். நான் அவரிடம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில்

அதற்கு ஆதரவாக ஏதாவது ஆவணங்களை கொடுத்துள்ளேனா என்றால் ? இல்லை. வாதிக்கு கார்த்திகேயன் பெயரில் ஆக்சிஸ் வங்கி கணக்கிலும், G.Pay மூலமாகவும், வாதியின் உறவினர் சுரேஷ் அவர்களது G.Pay மூலமாகவும் வட்டியுடன் சேர்த்து அசலையும் கொடுத்து கடனை அடைத்துவிட்டேன் என்று சொல்லியுள்ள நிலையில், வாதியின் பெயரில் நான் எதுவும் செலுத்தியதாக வழக்கில் குறிப்பிடாத நிலையில் கார்த்திகேயன் என்பவரும், சுரேஷ் என்பவரும் தனித்தனியாக வழக்கு தாக்கல்செய்துள்ள நிலையில் நான் சொல்லியுள்ள சங்கதிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தம் இல்லை என்றால் ? சரியல்ல. சுரேஷ் மட்டும் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். கார்த்திகேயன் என் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் வாதியின் கடனை எப்போதும் செலுத்தவில்லை என்றாலும், செலுத்தாத காரணத்தினால் தான் வாதி என் மீது வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் ? சரியல்ல. எனக்கு தற்போது மனநிலை சரியாக தான் உள்ளது என்றால் ? மனநிலை சரியாக தான் உள்ளது. மன அழுத்தத்திற்கான மருந்து மாத்திரைகளை எடுத்து வருகிறேன். நான் பல இடங்களில் கடன் பெற்று பல நபர்கள் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ? கணேசன் என்பவருக்கு கொடுத்திருந்த ஆவணங்களை வைத்து அவர் அவரது உறவினர்கள் வழியாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். கணேசன் என்பவரிடம் நான் ஆவணங்கள் கொடுத்து இருப்பதற்கு ஆதரவுகள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? இல்லை. நான் வாதிக்கு தரவேண்டிய பணத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு எதிர்வழக்காடி வருகிறேன் என்றால் ? சரியல்ல. வாதியிடம் பெற்ற கடனை செலுத்திவிட்டதற்கு ஆதரவாக செல் ரசீதுகள் எதையும் அல்லது பணத்தை கொடுத்ததற்கான உரிய ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரியல்ல. வங்கி கணக்கு பட்டியலை ஒப்படைத்துள்ளேன். வாதிக்கு நான் எவ்வித தொகையும் செலுத்தவில்லை என்றாலும், வாதி எனக்கு எவ்வித செல்

ரசீதுகளும் எழுதி தராத நிலையில் தான் எந்தவித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரியல்ல. நான் வாதியின் பணத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கில் நான் தற்கொலை முயற்சி செய்ததாக ஒரு நாடகம் நடத்தினேன் என்றால் ? சரியல்ல. அதன்பேரில் நான் எனது மனைவியை வைத்து பொய்யான ஒரு புகாரினை மதுரை கூடல் நகர் காவல் நிலையத்தில் கொடுத்து வாதியின் பணத்தை மோசடி செய்ய பொய்யான புகாரினை கொடுத்தேன் என்றால் ? சரியல்ல. நாளது வரை வாதிக்கு கொடுக்க வேண்டிய பணத்தினை கொடுக்காமல் இருந்து வருகிறேன் என்றால் ? சரியல்ல. நான் கடந்த 03.10.2021ம் தேதியில் வாதியிடம் எந்த கடனும் பெறவில்லை என்றும், பிராமிசரி நோட்டு எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், கடந்த 2020ம் ஆண்டு வாதியிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டதாகவும், சொல்லியிருப்பது வழக்கிற்காக சொல்லியுள்ள பொய் என்றால் ? சரியல்ல. கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்துள்ள சாட்சிகள் எனக்கு தெரியும் என்றால் ? கிரிஷ் என்பவரை தெரியும். தற்போது நான் எவ்வளவு சம்பளம் வாங்கி வருகிறேன் என்றால் ? மொத்த சம்பள தொகை ரூ.26,000த்தில் கடன் மற்றும் அனைத்து பிடித்தங்களும் போது தொகை ரூ.6,342 சம்பளமாக பெறுகிறேன். நான் சொல்வது பொய் என்றாலும், வாதியின் பணத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு ரூ.60,000 சம்பளம் பெற்றுக் கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. என்னுடைய சம்பள பட்டியலை நான் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். வாதியும், உறவினர்களான கிரிஷ், ராஜ்கமல், ராஜ் கண்ணன் மற்றும் பாண்டியராஜன் ஆகியோர்கள் அதிக வட்டி கேட்டு தொந்தரவு செய்ததாக சொல்லியுள்ள நிலையில் காவல் துறையில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் ? சரிதான். கடந்த 2022ம் ஆண்டு புகார் கொடுத்ததற்கு பிறகு நாங்கள் எந்த தொந்தரவும் செய்ய மாட்டோம் என்று எழுதிக் கொடுத்து சென்றுவிட்டார்கள். நான் வாதிக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்காத காரணத்தினால் வாதி என் மீது நடவடிக்கை

எடுத்துள்ளார் என்றால் ? சரியல்ல. 03.10.2021ம் தேதியில் இருந்து வாதியின் பெயருக்கு எந்தவித தொகையும் நான் செலுத்தாத காரணத்தினால் வாதி என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ? சரியல்ல. நான் எனது கணக்கில் இருந்து வாதியின் கணக்கிற்கு பணம் அனுப்பியதற்கான வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்துள்ளேன். கடனுக்கு ஆதரவாக நான் சொல்லியதை போல் எந்த தொகையும் செலுத்தவில்லை என்றால் ? சரியல்ல. ஏற்கனவே நான் வாதியிடம் பெற்ற கடனுக்கு ஆதரவாக தான் எனது வங்கி கணக்கில் இருந்து பணத்தினை அனுப்பி வைத்துள்ளேன் என்றால் ? இல்லை. எனக்கும் வாதிக்கும் எத்தனை ஆண்டு காலமாக வரவு செலவு இருந்து வருகிறது என்றால் கடந்த 3 1/2 வருடமாக இருந்து வருகிறது. நான் சொல்வது தவறு என்றாலும், கடந்த 2018ம் ஆண்டு முதல் வரவு செலவு எனக்கும் வாதிக்கும் இருந்து வருகிறது என்றால் ?சரியல்ல. நான் தாவா வழக்கிற்குண்டான தொகையை எங்கும் செலுத்தி வைக்கவில்லை என்றால் ? சரியல்ல. தாவா தொகையை நான் செலுத்த சட்டப்படி கடமைப்பட்டுள்ளேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.06.02 16:26:09 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்